**நாள் 23.11.2023**

**OS No. 51/2020**

**வா.சா. 1, திரு.திருமலைக்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய பிறந்த தேதி 03.06.1980. கடந்த 1982 ஆம் ஆண்டு பாகம் நடந்ததாக உங்களது வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீங்கள் தெரிவித்துள்ள பாகப்பிரிவினை பொய்யானது என்பதால் தான் அதனுடைய தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் 1982 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்த விவரம் எனது அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும் தேதி தெரியாது. இந்த வழக்குரையின் இரண்டாவது தபசில் சொத்தை தான் உங்கள் தகப்பனார் உங்களுக்கு நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அதன் விஸ்தீரணம் ஒன்றரை சென்ட் இடம் ஆகும். உங்கள் தகப்பனார் நன்கொடை கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தின் மூலம் வழக்குரை மூன்றாவது தபசில் சொத்தை உங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அது பொது நடைபாதை.

2. வா.சா.ஆ.2 நன்கொடை ஆவணத்தின் அசல் எனது தகப்பனார் வசம் உள்ளது. மேற்படி ஆவணத்தில் மூன்றாவது

தபசில் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இரண்டாவது தபசில் சொத்திற்கு மட்டும்தான் முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி நன்கொடை ஆவணத்தில் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன். மூன்றாவது தபசில் சொத்தில் உங்களுக்கு எந்தவிதமான உரிமையும், அனுபவமும் எந்த காலத்திலும் கிடையாது என்றும், மூன்றாவது தபசில் சொத்துக்களை பொறுத்து நீங்கள் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் கூறியுள்ள 1982 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை குறித்து வா.சா.ஆ.2 நன்கொடை ஆவணத்தில் எதுவும் உங்கள் தகப்பனாரால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

3. வழக்குரை இரண்டாவது தபசில் சொத்தான உங்கள் வீட்டிற்கும் முன்பு கிழமேல் தெரு உள்ளது என்றால் ஆமாம். எனது வீட்டிற்கு வாசல் வடக்கு பார்த்து கிழமேல் தெருவில் உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணம் கட்டிட வரைபடத்தில் உங்கள் வீட்டிற்கு வாசலும் வடக்கு பார்த்து தான் அனுமதி வாங்கியுள்ளீர்கள் என்றால் ஆமாம். மேற்படி கட்டிட வரைபடத்தில் வீட்டின் பின்புறம் தெற்கு பார்த்து ஜன்னல் அல்லது வாசல் வைப்பதற்கு அனுமதி எதுவும் நீங்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். அதேபோன்று கிழக்கு பக்கம் பார்த்தும் ஜன்னல் அல்லது வாசல் வைப்பதற்கு அனுமதி எதுவும் வாங்கவில்லை என்றால்

சரிதான். மேற்படி கட்டிட வரைபட அனுமதிக்கு எதிராக தான் நீங்கள் தெற்கு பார்த்து வாசல் மற்றும் ஜன்னல் தற்போது வைத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். தெற்கு பார்த்து வாசல் வைத்துள்ளோம். அதேபோன்று நீங்கள் கிழக்கு பார்த்தும் ஜன்னல் கட்டிட வரைபட அனுமதி இன்றி வைத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். மேற்படி கட்டிட அனுமதி இல்லாமல் சட்டவிரோதமாக தெற்கு பக்கம் பார்த்து வாசல் வைத்துள்ளதற்கு தான் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம்.

4. நீங்கள் வீடு கட்டும் போது மேற்படி தெற்கு பக்கம் பார்த்து வாசல் எதுவும் வைக்கவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி வாசலை வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி தெற்கு பக்கம் பார்த்து வைத்துள்ள வாசலை ஆய்க்குடி பேரூராட்சி அகற்ற வேண்டும் என்று சொன்னார்கள் என்றும், அதனால் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்று காட்டுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வீட்டின் கழிவறை குழாய் உங்கள் வீட்டு சுவரின் வெளியே வெளிப்புறமாக உங்கள் சுவரை ஒட்டி உள்ளது என்றால் ஆமாம். ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளின் வீட்டிற்கு எதிர்ப்புறமாக மேற்படி கழிவறை குழாய் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி கழிவறை குழாயில் இருந்து கெட்ட வாயு வெளியேறுவதாக ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் உங்கள் மீது ஆய்க்குடி பேரூராட்சியில் மனு

கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. அவ்வாறு புகார் நடவடிக்கை எடுப்பதிலிருந்து தவிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5. நீங்கள் வீடு கட்டும் போதே மூன்றாவது தபசில் சொத்தை நோக்கி வாசல் வைத்ததாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. OS No.48/2006 வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி அசல் வழக்கானது இந்த வழக்குரையின் இரண்டாவது தபசில் சொத்தை பொருத்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு சரியாக தெரியாது. மேற்படி அசல் வழக்கு தொடர்பான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளதை நீங்கள் படித்துப் பார்க்கவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதி எனது தகப்பனார் அவர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண். 48/2006 இல் உங்கள் தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் 1982 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்ததாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி வா.சா.ஆ.10 எதிர்வழக்குரை ஆவணத்தில் இந்த வழக்குரையின் மூன்றாவது தபசில் சொத்து பொது முற்றமாக இருந்ததாகவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உங்கள் தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில்

கூறப்பட்டுள்ள விபரங்களுக்கு எதிராகத்தான் தற்போது விவரங்களைச் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது அப்பாவிடம் தான் கேட்க வேண்டும். என் உடன் பிறந்தவர்கள் சங்கரேஸ்வரி மற்றும் சுப்புலட்சுமி என இரண்டு சகோதரிகள். இந்த வழக்கின் ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 48/2006 இல் இந்த வழக்குரையின் இரண்டாவது தபசில் சொத்தை பொறுத்துதான் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி அசல் வழக்கு எண். 48/2006 வழக்கு விசாரணைக்கு வந்தபோது உங்களது நெருங்கிய உறவினர் இறந்ததால் அப்போது ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் மேற்படி வழக்கை மேல் நடத்தவில்லை என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.12 ஆவணம் அசல் வழக்கு எண். 48/2006 இல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை ஆகும். மேற்படி அறிக்கையில் இந்த வழக்குரையின் மூன்றாவது தபசில் சொத்தில் ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் வீட்டிற்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மூன்றாவது தபசில் சொத்தில் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகள் வீட்டிற்கு செல்லும் படிக்கட்டுகள் அவர்கள் வீடு கட்டும் காலத்திலேயே இருந்து வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்குரையில்

நான்காவது தபசில் என குறிப்பிடப்பட்டுள்ளது எனது வீட்டு சுவருக்கு வெளிப்பக்கம் உள்ள இடம் ஆகும். நீங்கள் இந்த வழக்குரையில் நான்காவது தபசில் என்று குறிப்பிட்டுள்ள இடத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் ஒரு சென்ட் வரும். அதில் நீங்கள் இரண்டு படிகள் கட்டியுள்ளீர்கள் என்றால் ஆமாம்.

8. ஒன்றாவது பிரதிவாதியின் வீட்டு மாடிப்படிக்கும், என்னுடைய வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதி சுமார் இரண்டு அடி அகலம் தென் வடலாக இருக்கும். மேற்படி இரண்டு அடி இடத்தில் தான் நீங்கள் உங்கள் வீட்டின் பின்பக்க படிக்கட்டை கட்டியுள்ளீர்கள் என்றால் படிக்கட்டு போக இரண்டு அடி இடம் இருக்கும். படிக்கட்டு எனது வீட்டு சுவரில் இருந்து ஒன்றரை அடி அல்லது ஒரு அடி அளவில் இருக்கும். நீங்கள் படிக்கட்டு கட்டியுள்ள இடத்தில் உங்கள் வீட்டிற்கு மேற்கு பக்கம் மற்றும் கிழக்கு பக்கம் உள்ள ஆறுமுகம், சரவணன் உள்ளிட்ட நபர்களுக்கும் உரிமை உண்டு என்றால் ஆமாம். நீங்கள் பொது நடைபாதையில் நீங்கள் படிக்கட்டி உள்ளதால் அதில் உரிமை உள்ள மற்ற அனைவருக்கும் இடையூறாக இருக்கும் என்றும், அவர்கள் புகார் செய்ததால் நீங்களாகவே மேற்படி படிக்கட்டுகளை இடித்து விட்டீர்கள் என்றால் இல்லை. படிக்கட்டு மூழ்கடிக்க செய்யப்பட்டுள்ளது.

9. இந்த வழக்குரையில் நான்காவது தபசில் சொத்து பொது நடைபாதையில் ஆறுமுகம், சரவணன் ஆகியோருக்கு உரிமை உள்ளது என்பதை மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு மூலத்தில் உங்களுக்கும் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் 1982 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லி உள்ளது பொய் என்றால் எனக்கு பாகப்பிரிவினை நடக்கவில்லை, எனது தகப்பனாருக்கு தான் நடந்தது. ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் நீங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம், எனது தந்தையார் கொடுத்தார். நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வழக்கு மூலமும் கிடையாது என்றும், உங்கள் தகப்பனாருக்கும், ஒன்று, இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள முன் விரோதத்தின் அடிப்படையில் உங்கள் தகப்பனாரின் தூண்டுதலின் காரணமாக நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் காலாவதியாகிவிட்டது என்றும், இந்த வழக்கானது பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிரந்தரமாக சென்னையில் தான் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்து வருகிறேன். உங்கள் சொத்து தொடர்பாக ஏதேனும் தகராறு

அல்லது விசாரணைக்கு செல்ல வேண்டும் என்றால் உங்கள் தந்தை தான் செல்வார் என்றால் ஆமாம். அதனால் உங்கள் தகப்பனாரை ஆய்குடி பேரூராட்சியில் இருந்து விசாரணைக்கு அழைத்தார்கள் என்றும், மேற்படி விவரங்களை உங்கள் தகப்பனார் உங்களிடமிருந்து மறைத்துள்ளார் என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பில் மறுவிசாரணை**

10. ஆய்குடி பேரூராட்சியில் இருந்து நீங்கள் கட்டிட வரைபட அனுமதிக்கு விரோதமாக கட்டிடம் கட்டி உள்ளதாக அறிவிப்பு ஏதாவது கிடைத்ததா என்றால் இல்லை. உங்கள் வீட்டுக் கழிவறையில் இருந்து கழிவுநீர் வெளியேறியதாக ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

M SUNIL RAJA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2023.11.23 18:17:03 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

**/True Copy/**